முருகப்பெருமான் துணை

**மகான் மஸ்தான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.01.2023**, புதன்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த ராஜனே
பிரணவ சித்திமிகு ஞானம் அருள
சரவணச்சுடரேற்றி வழிபாட்டை
சன்மார்க்க நெறியாக வழங்கும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சிலை திங்கள்
வரங்களென இருபான் திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 20 ம் நாள் 04.01.2023, புதன்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை மஸ்தான் யானும்
அறிவிப்பேன் உலகநலம் காண
ஆசிதந்து அரங்கன் தருகின்ற
அன்னமதும் அருளமுது என்பேன்
4. என்கவே குடிலமுதை உண்டுவர
ஏவல் ஓமல் துன்பம் விலகும்
நன்மைபட ஆரோக்கிய பலமும்
நசித்திடும் பிணி சோடை அகலும்
5. அகலும் அரங்கமகான் ஆசியும்
அனுகி பெறும் தீட்சை பலமும்
செகத்தார்கள் மனபயம் போக்கும்
சித்தியோடு சூட்சும சக்திகளும் அருளும்
6. அருள்மிக்க அரங்கமகான் வழி
அடையும் சகலதீட்சைகளும்
இருள் போக்கி ஞான ஒளியூட்டும்
எக்காலமும் இடர்வாரா வண்ணம்
7. வண்ணமுடன் வளர்ச்சிநிலை கூட்டி
வாழும் காலம் உயிர் பாதுகாப்புத்தரும்
எண்ணம் யாவும் தூய்மை பெறும்
எவற்றிலும் வெற்றியே காணும்
8. காணவே நாட்டை வழிநடத்தும்
கண்ணியமிக்க தலைமைகட்கு
ஞானவான்களை தேர்வு செய்யும்
நல் அறிவுத் தெளிவு திடம் கிட்டும்
9. கிட்டுமே தரும குணம் பெருக
குவலயத்தில் மக்களிடையே
கட்டம் வாராத பொருளாதாரம்
கட்டுக்குள் உள்ள இயற்கை பலமுமாக

10. ஆகவே ஆக்கம் பெருகும்படி
ஆறுமுகனார் ஆசி தயவுபட
வகைபட உலகோர் இயங்கி
வரலாறு படைக்க நேரும்

11. நேரும் ஞான ஆட்சிக்காலம்
நிலவுலகம் ஏற்கும் வண்ணம்
பெருமைபட மாற்றும் வரம் கிட்டி
பேருலகில் சேவைபுரிய நேரும்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–